குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.65/2019

அ.சா. 2

2024–ம் ஆண்டு மே 10–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி –02 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபு | ஜாதி | |
| தந்தை பெயர் | மாதையசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.45 மணி,

Accused A1. Ramasamy present. A2. Kaliyamoorthy absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr. R.Kannan present for Accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் தாத்தியம்பட்டியில் குடியிருந்து கொண்டு பைனான்ஸ் வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. கடந்த 14.08.2018 ம் தேதி மாலை 04.15 மணியளவில் எனக்கு போன் செய்து அவர் பணி செய்த தொளசம்பட்டி பள்ளியில் இருந்து வீட்டிற்கு வருவதற்கு இருசக்கர வாகனத்தில் பூம்பட்டி ஏரி வழியாக வந்து கொண்டு இருந்த போது அவரது கழுத்தில் அணிந்து இருந்த செயினை பறித்து கொண்டு சென்றுவிட்டதாக பதற்றமாக சொன்னார்.

2. நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று என் மனைவியை விசாரித்த போது 2 நபர்கள் தலைக்கவசம் அணிந்து கொண்டு கருப்பு நிற இருசக்கர வாகனத்தில் வந்து அவரது கழுத்தில் அணிந்திருந்த 5 பவுண் தங்க செயினை பறித்து சென்று விட்டதாக சொன்னார். காவல் நிலையம் சென்று நானும் எனது மனைவியும் புகார் கொடுத்தோம். பின்பு 2 மாதம் கழித்து காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து என் மனைவியிடம் இருந்து நகையை பறித்தவர்களை பிடித்து வைத்திருப்பதாக சொன்னார்கள்.

3. நானும் எனது மனைவியும் காவல் நிலையம் சென்றோம். அப்போது காவல் நிலையத்தில் இருந்த ராமசாமி ஆய்வாளரிடம் அவர் தான் என் மனைவியிடம் இருந்து நகையை பறித்ததாக சொன்னார். அதன்பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து எனது மனைவியின் நகையை பெற்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

4. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 01.51 மணி,

ஒம்/– எஸ்.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.